
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 25A - இந்திய வரலாறு



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

அந்தரங்கமானது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 25A - இந்திய வரலாறு

## புள்ளி வழங்கும் திட்டம்

- I பகுதி - 01 x 40 = 40

II பகுதி

| | | |
|---|---|---|
| கட்டாய வினாவிற்கு | = | 18 |
| ஏனைய 03 வினாக்களிற்கு 14 வீதம் | = | 42 |
| II ஆம் பகுதிக்கு மொத்தப் புள்ளி | = | 60 |

இறுதிப்புள்ளி = 40 + 60 = 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................... ✓ $\frac{4}{5}$
.....................................................
.....................................................

(ii) ..................................................... ✓ $\frac{3}{5}$
.....................................................
.....................................................

(iii) ..................................................... ✓ $\frac{3}{5}$
.....................................................
.....................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி “வினாப்பத்திரம் II” எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය II (I කොටස)
வரலாறு II (பகுதி I)
History II (Part I)

25 - A | T | II

23.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1206 வரை**

சுட்டெண்: ....................................

**அறிவுறுத்தல்கள்:**

* இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, **அறிவுறுத்தல்களுக்கமைய உமது விடையை** இப்பத்திரத்திலேயே **குறித்துக் காட்டுக.**
* இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது பகுதி I இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** (1) இந்துகுஷ் (2) சுலைமான் (3) நீலகிரி (4) கிர்தார் (5) இமயமலை (.........)

**2.** (1) கொக்ரா (2) ஜேலம் (3) செனாப் (4) பயஸ் (5) ராவி (.........)

**3.** (1) சாகுந்தலை (2) மாளவிகா அக்னி மித்ர (3) விக்ரமூர்வசி (4) ரட்னாவலி (5) குமாரசம்பவம் (.........)

**4.** (1) மஸ்கி கல்வெட்டு (2) கிர்னார் கல்வெட்டு (3) றுமின்டேய் கல்வெட்டு (4) கௌசம்பி கல்வெட்டு (5) நாசிக் கல்வெட்டு (.........)

**5.** (1) ஸ்ராபோ (2) மெகஸ்தினிஸ் (3) செலியூக்கஸ் நிக்கேற்றர் (4) பிளினி (5) தொலமி (.........)

**6.** (1) தமிழ் (2) கன்னடம் (3) மராத்தி (4) தெலுங்கு (5) மலையாளம் (.........)

**7.** (1) கார்லி (2) எல்லோரா (3) அஜந்தா (4) பாக் (5) சாராநாத் (.........)

**8.** (1) அனு (2) யது (3) துர்வாஸ (4) சுதாஸ் (5) புரு (.........)

**9.** (1) காசி (2) கோசல (3) அங்க (4) மகத (5) வஜ்ஜி (.........)

**10.** (1) சிமுக (2) கிருஷ்ணா (3) நஹபான (4) முதலாம் சாதகர்ணி (5) கௌதமிபுத்ர சாதகர்ணி (.........)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச் சோடியைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**11.** (1) வருணன் - ஆகாயத்தின் கடவுள்
(2) அக்னி - தீயின் தலைவன்
(3) பிருதிவி - நிலத்தின் தலைவன்
(4) இந்திரன் - படைப்பின் தலைவன்
(5) உஷா - உதயத்தின் பெண் கடவுள் (.........)

**12.** (1) பாணினி - அஸ்ராதயாய
(2) வால்மீகி - இராமாயணம்
(3) பாரவி - கிரதர்யுனா
(4) தண்டி - தஸகுமாரசரிதம்
(5) பதஞ்சலி - பஞ்சதந்திரம் (.........)

**13.** (1) வராங்கல் - காகதியா
(2) துவாரசமுத்ர - ஹொய்சால
(3) மதுரை - சோழர்
(4) தேவகிரி - யாதவர்
(5) காஞ்சி - பல்லவர் (.........)

**14.** (1) ஐகோள் கல்வெட்டு - இரண்டாம் புலிகேசி
(2) தௌலி கல்வெட்டு - சமுத்ரகுப்தன்
(3) யுனகார்த் கல்வெட்டு - ருத்ரதாமன்
(4) பிதாரி கல்வெட்டு - இரண்டாம் சந்திரகுப்தன்
(5) டில்கி தொப்ரா கல்வெட்டு - அசோகன் (.........)

**15.** (1) மதுரை கொண்ட - முதலாம் பராந்தகன்
(2) அமித்ராகாத - பிந்துசாரன்
(3) சகல உத்தரபாத நாத - ஹர்ஷவர்த்தனன்
(4) கவிராஜ் - கனிஷ்கன்
(5) வாதாபி கொண்ட - நரசிங்கவர்மன் (.........)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் /கூற்றுகள் /திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கி.மு. 327 | A | முதலாம் இராஜேந்திரசோழன் அரியணை ஏறுதல் |
| (ii) | கி.மு. 269 | B | மகா அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பு |
| (iii) | கி.பி. 78 | C | ஹர்ஷவர்த்தனன் முடி சூடுதல் |
| (iv) | கி.பி. 606 | D | கனிஷ்கன் அரியணை ஏறுதல் |
| (v) | கி.பி. 1016 | E | அசோகனின் பட்டாபிஷேகம் |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | நர்மதா | A | ரூபர் |
| (ii) | காவேரி | B | பாடலிபுத்ர |
| (iii) | கங்கை | C | தஞ்சாவூர் |
| (iv) | சட்லஜ் | D | ஹரப்பா |
| (v) | ராவி | E | பாருகச்சா |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

| | X | | Y |
|---|---|---|---|
| **18.** | (i) | அஸ்வகோஷர் | A பிருகத்சம்கிதை |
| | (ii) | கல்ஹணர் | B மகாவிபாஷசாத்ரம் |
| | (iii) | முதலாம் மகேந்திரவர்மன் | C முத்திராரக்ஸம் |
| | (iv) | விசாகதத்தர் | D மத்தவிலாஸபிரகாஷணம் |
| | (v) | வராகமிகிரர் | E ராஜதரங்கிணி |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

| | X | | Y |
|---|---|---|---|
| **19.** | (i) | பாகதுக | A வரிகள் |
| | (ii) | சுல்கா | B பொருளாளர் |
| | (iii) | புர | C வரிசேகரிப்பாளர் |
| | (iv) | சுத | D தேர்ப்பாகன் |
| | (v) | சங்கிரிகிதா | E கோட்டை |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

| | X | | Y |
|---|---|---|---|
| **20.** | (i) | மௌஸ் | A பல்லவர் |
| | (ii) | அக்னிமித்ரன் | B சுங்கர் |
| | (iii) | விஷ்ணுகோபன் | C பாலர் |
| | (iv) | வட்ஜராஜ | D சகர் |
| | (v) | ஆனந்தபாலன் | E பிரதிகார |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிந்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**21. புராதன தானியக் களஞ்சியத்தின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட சிந்துவெளி நகரம் எது?**
(1) மொகஞ்சதாரோ (2) ஹரப்பா (3) கலிபங்கன்
(4) லோதல் (5) சங்குதாரோ (.........)

**22. அனேகமான மகாயான மறை நூல்கள் எந்த மொழியில் எழுதப்பட்டுள்ளன?**
(1) பாளி (2) சமஸ்கிருதம் (3) மாகதி
(4) பிராகிருதம் (5) ஹிந்தி (.........)

**23. நாக இளவரசி குபேரநாகாவை திருமணம் செய்த குப்த மன்னன் யார்?**
(1) முதலாம் சந்திரகுப்தன் (2) சமுத்திரகுப்தன் (3) ஸ்கந்தகுப்தன்
(4) குமாரகுப்தன் (5) இரண்டாம் சந்திரகுப்தன் (.........)

**24. கியூங் - சாங் கல்விகற்ற பௌத்த கல்வி நிறுவனம் எது?**
(1) வலாபி (2) நாலந்தா (3) விக்கிரமசீலா
(4) தக்ஷீலா (5) ஓடந்திபுரி (.........)

**25. கி.பி. 712 இல் சிந்து மீது படையெடுத்த முதலாவது அராபிய ஆக்கிரமிப்பாளன் யார்?**
(1) முகமது பின் காஸிம் (2) கஜ்னி முகமது (3) கோர் முகமது
(4) குதுப்புதீன் - ஐபெக் (5) சபுக்ரிஜுன் (.........)

- **26 தொடக்கம் 30** வரையுள்ள வினாக்களில் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**26. அலெக்சாந்தரின் இந்தியா ஆக்கிரமிப்பு**

(1) ஆக்கிமினியன் மன்னன் டாரியஸை தோற்கடித்ததன் பின்னர் அலெக்சாந்தர் இந்துக்குஷ் ஊடாக இந்தியாவிற்குள் நுழைந்தான்.

(2) அலெக்சாந்தர், கங்கை நதி வரையிலான வடமேற்கு இந்தியாவில் உள்ள அனைத்து அரசுகளையும் வெற்றி கொண்டான்.

(3) அலெக்சாந்தர் மகதத்தில் நந்தர்கள் ஆட்சியின் போது இந்தியாவை ஆக்கிரமித்தான்.

(4) அலெக்சாந்தரின் படையெடுப்பின் விளைவாக இந்தியாவிற்கும் மேற்குலகிற்கும் இடையிலான சுதந்திரமான தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

(5) இந்திய இலக்கியங்களில் அலெக்சாந்தரின் இந்தியா ஆக்கிரமிப்பு பற்றிய எந்தக் குறிப்புகளும் காணப்படவில்லை.

(.........)

**27. காரவேல**

(1) காரவேல கலிங்கத்தில் சேதி வம்சத்தின் மூன்றாவது ஆட்சியாளனாகக் காணப்படுகின்றார்.

(2) கி.மு முதலாம் நூற்றாண்டில் கலிங்கம் காரவேலவால் ஆளப்பட்டதாக நம்பப்படுகிறது.

(3) இவர் சமண மதத்தில் பக்தி கொண்டவராக காணப்பட்டார்.

(4) காரவேலவின் சாதனைகள் பற்றி உதயகிரி மலையில் உள்ள ஹதிகும்பா கல்வெட்டு விபரிக்கின்றது.

(5) அவரின் இறப்பின் பின்னர் பாண்டியரால் பேரரசு வெற்றி கொள்ளப்பட்டது.

(.........)

**28. சமணமதம்**

(1) சமணர் விரதாஸ் எனப்படும் ஐந்து ஒழுக்க நெறிகளை அனுஷ்டிக்கின்றனர்.

(2) சமண மதத்தின் முதல் தீர்த்தங்கரராக மகாவீரர் விளங்குகின்றார்.

(3) சமணர் தியானத்தை முக்கிய பயிற்சி நெறியாகக் கருதுகின்றனர்.

(4) சமணர் திகம்பர, சுவேதாம்பர என இரண்டு பிரதான பிரிவினராக விளங்குகின்றனர்.

(5) சமணரின் பிரதான கொள்கையாக அகிம்சைநெறி காணப்படுகின்றது. (.........)

**29. பாண்டியர்**

(1) பாண்டிய இராச்சியத்தின் தாபகராக கடுங்கோன் பாண்டியன் கருதப்படுகின்றார்

(2) பெண்களால் பாண்டிய இராச்சியம் ஆளப்பட்டதாகக் மெகஸ்தினிஸ் குறிப்பிடுகின்றார்.

(3) பாண்டிய அரசு தன்னுடைய ஆதிக்கத்துள் கொண்டுவரப்பட்டதாக அசோகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

(4) இந்திய ஆதாரங்கள் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் இலங்கை மன்னனைத் தோற்கடித்ததாகக் குறிப்பிடுகின்றன.

(5) சோழ மன்னனான முதலாம் பராந்தகனால் தோற்கடிக்கப்பட்ட இரண்டாம் மாறவர்மன் இராசசிம்மன் இலங்கைக்குத் தப்பியோடினான்.

(.........)

**30. வாதாபிச்சாளுக்கியர்**

(1) முதலாம் புலிகேசி மன்னன் வாதாபியைத் தனது தலைநகராக்கினான்.

(2) முதலாம் புலிகேசி மன்னன் அஸ்வமேத யாகத்தையும் வாஜ்பேய சடங்குகளையும் நிறைவேற்றினான்.

(3) பல்லவ மன்னன் முதலாம் நரசிங்கவர்மன் வாதாபியை ஆக்கிரமித்து இரண்டாம் புலிகேசியைக் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

(4) பிராமணியத்தைக் கடுமையாகப் பின்பற்றியதால் சாளுக்கிய ஆட்சியாளர் ஏனைய சமயப் பிரிவுகளைச் சகித்துக் கொள்ளவில்லை.

(5) சில பிராமணிய கோவில்கள் பலம்மிக்க பாறைகளைக் கொண்டு கட்டப்பட்டன.

(.........)

● **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A)**, **(B)**, **(C)**, **(D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் .................................... **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................................... **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................................... **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................................... **4** எனவும்

**ஒரு விடை மட்டும்** அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ..... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | **ஒரு விடை மட்டும்** அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**31. வேத காலம்**

(A) இருக்கு வேதத்தில் விந்திய மலையும் நர்மதா நதியும் குறிப்பிடப்படுகின்றன.
(B) இருக்கு வேத கால மக்கள் மரக்கறி வகைகளை மட்டுமே நுகர்ந்தனர்.
(C) இருக்கு வேத கால மக்கள் இனக்குழுக்களாகப் பிரிந்திருந்தனர்.
(D) விசுவாமித்திரர் தலைமையிலான பத்து இனக்குழுக்களைக் கொண்ட கூட்டரசை பாரதாஸ் மன்னன் சுதாஸ் தோற்கடித்தான். (.........)

**32. சாதவாகனர்**

(A) சாதவாகன வம்சத்தின் முதல் அரசன் சிம்மவிஷ்ணு ஆவார்.
(B) சாதவாகனரின் தலைநகரமாக பிரதிஸ்தான் இருந்தது.
(C) கௌதமி பாலஸ்ரீ, கௌதமபுத்திர சாதகர்ணியின் தாயாராவார்.
(D) சாதவாகனர் ஆட்சியில் இந்துசமயம் அதன் உச்ச நிலையை அடைந்தது. (.........)

**33. தர்மபால**

(A) பால வம்சத்தின் தாபகர் கோபால மன்னனின் மகனாகவும் வாரிசுரிமையாளராகவும் தர்மபால காணப்பட்டார்.
(B) ஒடந்திபுர மடாலயத்தின் தாபகராக தர்மபால விளங்கினார்.
(C) தர்மபாலவின் குறிப்பிடத்தக்க சாதனையாக இருப்பது கன்னோஜியின் இந்திரயுதனைப் பதவியிலிருந்து அகற்றியமையும் சக்கிராயுதனைப் பதவியில் அமர்த்தியமையுமாகும்.
(D) சக்கிராயுதனைப் பதவியிலிருந்து அகற்றும் இரண்டாம் நாகபட்டாவின் முயற்சியை ,தர்மபாலவினால் தோற்கடிக்கக்கூடியதாக இருந்தது. (.........)

**34. இந்தியாவில் சகர் ஆட்சி**

(A) கி.மு. 75 அளவில் சிந்துவில் சகர் தம் அதிகாரத்தை நிறுவினர்.
(B) அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தனர்.
(C) சகர்களின் ஆட்சிப் பரப்புக்குட்பட்டிருந்த மதுரா, தக்கஷிலா ஆகியன வடக்கு சத்ரப் என அறியப்பட்டது.
(D) மால்வா, காத்தியவார் உள்ளடக்கிய சகர்களின் ஆட்சிப் பரப்பு மேற்கு சத்ரப் என அழைக்கப்பட்டது. (.........)

**35. ஸ்கந்தகுப்தன்**

(A) தந்தை குமாரகுப்த மன்னனால் புஸ்யமித்திரர்களை எதிர்த்து யுத்தம் புரிவதற்காக ஸ்கந்தகுப்தன் அனுப்பப்பட்டான்.
(B) கடும் மழையினால் உடைப்பெடுத்திருந்த சுதர்சன ஏரியை மன்னன் ஸ்கந்தகுப்தன் புனரமைத்தான்.
(C) ஸ்கந்தகுப்தன் தீவிர சிவ பக்தனாவான்.
(D) ஸ்கந்தகுப்தனின் மரணத்தைத் தொடர்ந்து குப்தப் பேரரசு உள்நாட்டுக் குழப்பங்களினால் வீழ்ச்சியடைந்தது. (.........)

● **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களில் **இரண்டு** கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து **அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36.** | மன்னன் பிம்பிசார தன் தலைநகர் பாடலிபுரத்திலிருந்து மகதத்தில் தன் அதிகாரத்தை உறுதிப்படுத்தினான். | மௌரியர் காலத்தில் பாடலிபுத்திர நகரின் நிர்வாகம் ஆறு சபைகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. | (.........) |
| **37.** | பேரரசின் குப்தப் வீழ்ச்சியைத் தொடர்ந்து வட இந்தியாவின் அரசியல் நடவடிக்கைகளின் தலைமைத் தானமாக கன்னோஜி மாறியது. | மன்னன் ஹர்ஷவர்த்தனனால் கன்னோஜியில் ஒரு பேரரசு தாபிக்கப்பட்டது. | (.........) |
| **38.** | விந்திய மலையைத் தாண்டி தமது அதிகாரத்தை இராச்சியம் சோழப் பேரரசாகும். | பாண்டிய அரசின் அழிவில் இருந்தே சோழர் தமது அரசினைத் தாபித்துக் கொண்டனர். | (.........) |
| **39.** | சீதையை மீட்பதற்காக இராமன் இராவணனுடன் செய்த போர் இராமாயணத்துக்கு அடிப்படையாய் அமைந்தது. | இந்தியாவின் ஒரேயொரு வீர காப்பியம் இராமாயணமாகும். | (.........) |
| **40.** | கி.பி. எட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் யசோவர்மன் கன்னோஜியை ஆட்சி செய்தான். | பாகியனின் அறிக்கைகளில் இருந்தே யசோவர்மன் பற்றிய தகவல்கள் பெறப்பட்டது. | (.........) |

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂය අංකය / பாட இலக்கம்: **25A**    විෂය / பாடம்: **இந்திய வரலாறு**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 4 | 21. | 2 | 31. | 3 |
| 02. | 1 | 12. | 5 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 5 | 33. | 4 |
| 04. | 5 | 14. | 2/4 | 24. | 2 | 34. | 5 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 1 | 35. | 1 |
| 06. | 3 | 16. | 2 | 26. | 2 | 36. | 4 |
| 07. | 5 | 17. | 5 | 27. | 5 | 37. | 2 |
| 08. | 4 | 18. | 2 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 5 | 19. | 3 | 29. | 3 | 39. | 1 |
| 10. | 3 | 20. | 4 | 30. | 4 | 40. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25 - A T II

## இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1206 வரை

**அறிவுறுத்தல்கள்:**

* **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

1. உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்ட **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் எவையேனும் **இரண்டுக்குச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள்** எழுதுக.

(i) லோதல் (ii) ஆரவல்லி
(iii) இந்திரபிரஸ்த (iv) கோதாவரி ஆறு
(v) மக்ரான் கணவாய் (vi) பாடலிபுத்திர
(vii) புருஷபுர (viii) காவேரிப் பட்டணம்

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; ஒவ்வொரு சுருக்கமான குறிப்புக்கும் **05** புள்ளிகள்.)*

2. புராதன இந்தியாவின் வரலாற்றை வடிவமைப்பதில் புவியியற் காரணிகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

3. "சிந்துவெளி நாகரிகம் இந்தியாவின் மிகப் புராதன நகர நாகரிகமாகும்."
   (i) சிந்துவெளி நாகரிகத்தின் இடிபாடுகளை முதன்முறையாகக் கண்டுபிடித்த பிரித்தானியரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
   (ii) இந்நாகரிகத்தின் **இரண்டு** பிரதான நகரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (iii) இந்நாகரிகத்தின் தோற்றம் பற்றிய கருத்துக்களைச் சுருக்கமாக ஆராய்க. (04 புள்ளிகள்)
   (iv) சிந்துவெளி நாகரிகத்தின் நகரப் பண்புகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (07 புள்ளிகள்)

4. வட இந்தியாவில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் காணப்பட்ட அரசியல் நிலைமைகளை விளக்குக. (14 புள்ளிகள்)

5. "மௌரியப் பேரரசைத் தாபித்தமைக்கான முழுப் புகழும் மன்னன் சந்திரகுப்த மௌரியனுக்கே உரித்தாகும்." ஆராய்க. (14 புள்ளிகள்)

6. குஷாண ஆட்சியாளர்கள் இந்தியாவின் கலாசார வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

7. சமுத்திரகுப்த மன்னனின் இராணுவ நடவடிக்கைகளே குப்தப் பேரரசின் உருவாக்கத்திற்கு வழிவகுத்த மிகப் பிரதான காரணியாகும்.
   (i) சமுத்திரகுப்த மன்னனின் இராணுவ நடவடிக்கைகள் பற்றி விபரிக்கும் கல்வெட்டின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
   (ii) சமுத்திரகுப்த மன்னனின் பிரதான இராணுவப் படையெடுப்புகள் **இரண்டு** பற்றிப் பகுப்பாய்க. (04 புள்ளிகள்)
   (iii) குப்தப் பேரரசின் உருவாக்கத்திற்குச் சமுத்திரகுப்த மன்னனின் இராணுவ நடவடிக்கைகள் அடிப்படையாய் அமைந்த விதத்தை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (09 புள்ளிகள்)

**8.** கன்னோஜியின் மேலாதிக்கத்துக்காக மன்னன் ஹர்ஷவர்த்தனனின் ஆட்சியின் பின்னர் ஏற்பட்ட போராட்டத்தை விவரிக்குக. (14 புள்ளிகள்)

**9.** **(A)** பகுதிக்கு **அல்லது** **(B)** பகுதிக்கு மாத்திரம் விடை எழுதுக.

**(A)** தென்னிந்திய கலாசாரத்தின் வளர்ச்சிக்குப் பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பினைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

**(B)** சோழர்களின் நிர்வாக முறைமையின் பிரதான பண்புகளைப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

| | | |
|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 25-A | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................



இந்திய வரலாறு

பகுதி.11

**(1) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறஉருவப்படத்தில் கீழே தரப்பட்ட எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிட்டு அவற்றுள் எவையேனும் இரண்டுக்குச் சிறு குறிப்பு எழுதுக**

**( சரியாகக் குறிப்பதற்கு ஒரு புள்ளியும் வரலாற்றுக் குறிப்பிற்கு 5 புள்ளிகளும் வழங்குக )**

**(2) புராதன இந்தியாவின் வரலாற்றை வடிவமைப்பதில் புவியியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தைப் பரிசீலனை செய்க.**

- துணைக் கண்டமான இந்தியாவின் புவியியல் அமைவிடம் அதன் வரலாற்றில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.
- வடக்கு வடகிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள இமய மலைத்தொடர் வடமேற்கே இந்துகுஷ், கிர்தார், சுலைமான் முதலிய மலைத் தொடர்களால் இந்தியா வெளித் தொடர்பின்றிக் காணப்பட்டமை.
- மேற்கே அரபிக்கடலாலும் தெற்கு மற்றும் கிழக்கில் இந்துசமுத்திரத்தாலும் சூழ்ந்து காணப்படல்
- நாட்டின் உட்புறத்திலும் பின்வரும் புவியியல் அம்சங்களைக் கொணடுள்ளமை
  - கணவாய்கள் (கைபர், போலான், மக்ரான், பெரோடா, பலகோர்)
  - மலைகள் (இமயமலை, ஆரவல்லிமலை, விந்தியமலை, சத்புத்திரமலை, கிர்தார்மலை சுலைமான்மலை, தென் காட்ஸ்மலை, மேற்குக் காடஸ் மலை)
  - நதிகள்
    (கங்கை, இந்து, கோதாவரி, யமுனா, நர்மதா, தப்தி, துங்கபத்திரா கிருஷ்ணா முதலிய நதிகள்)
  - துறைமுகங்கள்(லோதால், தாமிரலிப்தி, சுப்பாரக, பாருகச்ச, காவேரி)
  - பாலைவனம் (தார்)
  - சமவெளி (கங்கை, யமுனா)

  போன்ற பல்வேறுபட்ட புவியியல் அம்சங்களைக் கொண்டுள்ளமை

**( இவ்வாறன புவியியல் அம்சங்கள் இந்திய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய முறையினை உதாரணங்களின் மூலம் விளக்குதல் வேண்டும்)**

3) **"சிந்துவெளி நாகரிகம் இந்தியாவின் மிகப்புராதன நகர நாகரிகமாகும்."**

**(i) சிந்துவெளி நாகரிகத்தின் அழிபாடுகளை முதன் முதலில் கண்டுபிடித்த பிரித்தானிய நாட்டவரின் பெயரைக் குறிப்பிடுக?**

- அலெக்சாண்டர் கனிங்ஹறம்
- சேர். ஜோன் மார்ஷல் (1 புள்ளி)

**(ii) இந்நாகரிகத்திற்குரித்தான பிரதான நகரங்கள் இரண்டைக் குறிப்பிடுக?**

- மொஹஞ்சதாரோ
- ஹரப்பா
- லோதல்
- கலிபங்கன்
- பணவாலி
- டொலவீர
- ரகீகார் (O2 புள்ளிகள்)

(iii)இந்நாகரிகத்தின் தோற்றம்பற்றிய கருத்துக்களைச் சுருக்கமாக ஆராய்க?

- இதன் தோற்றம் பற்றி இருவகையான கருத்துக்கள் நிலவுகின்றன
- உள்நாட்டுக் கருத்து - கிலீனி டானியல் என்பவர் மேற்கு இந்திய கிராமிய கலாச்சாரத்திலிருந்து தோற்றம் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.
- வெளிநாட்டுக் கருத்து - எலியட் சுமித் - என்பவர் எகிப்திய நாகரிகத்திலிருந்து தோற்றம் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.
- ரெக்லன்சாமி – சுமேரிய நாகரிகத்திலிருந்து தோன்றிய கிளை நாகரிகமாகக் குறிப்பிட்டுள்ளார்.
- சேர் மோடிமர் வீலர்–மத்திய ஆசியாவிலிருந்து பரவிய நாகரிகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

(04புள்ளிகள்)

(iv)சிந்துவெளி நாகரிகத்தின் நகரப்பண்புகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க?

- உள்நகர், புறநகர் எனப் பிரதானமாக இரு பிரிவுகளாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல்
- உள் நகர் உயர்ந்த மேடையொன்றின் மீது அமைக்கப்பட்டிருந்தது. இதனை நிர்வாக மத்திய நிலையமாகப் பயன்படுத்தினர்.
- புறநகர் – பொதுமக்கள் வாழ்ந்த பகுதியாகும்.
- நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தமை.
- அலங்காரத்தை விடப் பயன்பாட்டிற்கு முன்னுரிமை கொடுத்து நிர்மாணிக்கப்பட்டிந்தமை.
- நகரைப் பாதுகாக்க அரண்கள் அமைக்கப்பட்டிருந்தமை.
- செங்கற்களைப் பயன்படுத்திக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தமை.(சுட்ட செங்கற்கள், சூரிய ஒளியில் காய்ந்த கற்கள்)
- பாரிய தூண்கள், தடித்த செங்குத்தான சுவர்கள், விசாலமான மண்டபங்கள், நீர்த்தடாகங்கள், களஞ்சிய சாலைகள் என்பனவற்றைக் கொண்டிந்தமை.
- சிறியதும், பெரியதுமான அறைகளைக் கொண்ட வீட்டுத் தொகுதிகள் காணப்பட்டமை.
- வளர்ச்சியடைந்த சுகாதார, கழிவறை முறைகள் காணப்பட்டமை.
- பிரதான வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட கட்டடங்களின் நுழைவாயில் பிரதான வீதிக்கு நேராக இல்லாமல் கிளை வீதிகளுக்கு நேராக அமைக்கப்ப்டிருந்தமை.
- நிலா முற்றம் கொண்ட, நன்கு காற்றோட்டமுள்ள வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை

- சமூகத்தில் வெவ்வேறு தொழில்களைப் புரியும் நபர்களிற்கு புறம்பான வீடுகள் காணப்பட்டமை.

- சிறந்த நீர் வழங்கல் முறை காணப்பட்டமை.

- திடீர் வெள்ளப்பெருக்குகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் வகையில் சிறந்த வடிகான்கள் அமைக்கப்பட்டிருந்தமை.

- வடிகான்கள் கற்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தமை.

- திட்டமிட்டு அமைக்கப்பட்ட வீதிகள்.

- வீதி விளக்குகள்.

- சிறந்த நிர்வாகமுறை நிலவியமை.

- சிறப்பான உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரம் இடம்பெற்றமை.

- சமூகத்தில்
  - நகர பிரபுக்கள்
  - ஆடம்பரமாக வாழ்ந்த நகர மக்கள்
  - செல்வந்த வியாபாரிகள்
  - தொழிலாளர்கள் என நான்கு வகுப்பினர் இருந்துள்ளனர்

(07 புள்ளிகள்)

**4) வட இந்தியாவில் கி.மு 6ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட அரசியல் நிலைமைகளை விளக்குக?**

- கி.மு 6ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் நிலவிய அரசியல் முறைகள் பற்றிப் பௌத்த, ஜைன மற்றும் பிராமண நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- கிராமியக் கோத்திர நிலையிலிருந்து விடுபட்டு பெரிய குடியிருப்புக்களாக வளர்ச்சியடைந்தமை. (16 பெருங் குடியிருப்புக்கள்)

- பௌத்த மூலாதாரமான அங்குத்தர நிகாயவில் 16 பெருங் குடியிருப்புக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

- அவை அங்கம், மகதம், காசி, கோசல, வஜ்ஜி, மல்ல, வேதி, வத்சய, மத்சய, பாஞ்சால, குரு, சூரசேன, அஸ்மக, அவந்தி, காந்தார, காம்போஜ என்பனவாகும்.

- இப்பதினாறு பெருங்குடியிப்புக்களிலும் இருவகையான நிர்வாக முறைகள் நிலவியுள்ளன.
  - அரசாட்சி
  - கூட்டாட்சி என்பனவாகும்

**அரசாட்சி முறையின் பண்புகள்**

- 16 பெருங்குடியிருப்புக்களிலும் அனேகமாக அரசாட்சியே இடம்பெற்றுள்ளது. அவற்றுள் நான்கு பலம் பொருந்திய அரசுகள் காணப்பட்டன. அவை மகதம், கோசல, வத்ச, அவந்தி என்பனவாகும்
- இவ்வரசாட்சியில் அரசனே பிரதானமானவனாக இருந்தான்.
- சட்டம், நீதி, நிர்வாகம் அரசனிடம் காணப்பட்டன.
- அமைச்சர்கள் குழு மூலம் சில அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்தது.
- யானை. குதிரை. தேர் மற்றும் காலாட்படைகள் காணப்பட்டன.
- மத்சய கொள்கை மற்றும் விவாகத் தொடர்புகள் மூலம் ஏனைய குடியிருப்புக்களைத் தனதாக்கும் செயற்பாட்டை இந்நான்கு பெருங்குடியிருப்புக்கள் மேற்கொண்டன.
- இறுதியில் இந்நான்கு குடியிருப்புக்களிலும் மகதம் மிகப்பலமான இராசதானியாக மாறியது.
- அதற்கு மகதத்தின் புவியியல் அம்சங்கள் சாதகமாக அமைந்தன.

**கூட்டாட்சி முறை (கண ராஜ்யம்)**

- வஜ்ஜி, மல்ல. ஆகிய குடியேற்றங்களில் இக்கூட்டாட்சி சிறப்பாக இடம்பெற்றுள்ளது.
- பௌத்த இலக்கியங்களில் 09 (கண) அரசுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.
  - கபிலவஸ்துவில் - சாக்கியன்
  - வைசாலியில் - லிச்சவி
  - மிதிலையில் - விதேகயன்
  - ராமகிராமத்தில் - கோலியன்
  - சிசுநகரில் - பாவாஹறி மல்லன்
  - அல்லகப்பயில் - புலிவர்
  - கேசபுத்தவில் - காலாமயன்
  - பிப்பிலிவனத்தில் - மௌரியர்
  - சுங்சுமகிரியில் - பக்கயன்
- இவ்வரசுகளில் அரச பிரதானிகள், கணபதி, கணராஜன், கணதலைவன் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர்.
- கூட்டாட்சி முறையில் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபையின் மூலம் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது.
- லிச்சவி கூட்டாட்சியில் 7707 அரசர்கள் இருந்ததாக பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- லிச்சவி அரசர்கள் விசாலமான சபைகளில் (சந்தாகாற சபாவ) ஒன்று கூடினர்.

- அரச நிர்வாகம் 7வகையான தர்மத்தின் கீழ் (சப்த அபரிஹானி தர்ம)மேற்கொள்ளப்பட்டது.

- பண்டைய சம்பிரதாய அடிப்படையில் தண்டனைகள் வழங்கப்பட்டன.

- புத்த பெருமான்கூட வஜ்ஜி அரசில் நிலவிய 7 வகையான தர்ம நிர்வாக முறையினை நேசித்துள்ளார்

(14 புள்ளிகள்)

**05)"மௌரியப் பேரரசை ஸ்தாபித்தமைக்கான முழுப்புகழும் மன்னன் சந்திர குப்த மௌரியனுக்கே உரித்தாகும்" ஆராய்க?**

- மௌரியப் பேரரசின் ஸ்தாபகர் அதேபோன்று இந்திய வரலாற்றில் முதலாவது பேரரசர்.

- கௌடில்யன் என்ற அரசியல்ஆலோசகரின் உதவியுடன் நந்தர்களைத் தோற்கடித்தமை.

- வடமேற்கு இந்தியாவை கிரேக்கர்களிடமிருந்து மீட்டமை.

- இரு பகுதியினருக்குமிடையில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வட மேற்கு இந்தியாவைத் தனது பேரரசாக விரிவாக்கியமை.

- காபூல், கந்தகார், பலுஜிஸ்தான் போன்ற பகுதிகள் உட்பட பாரசீக எல்லைவரை தனது பேரரசை விரிவாக்கியமை.

- பயிற்றப்பட்ட 500 குதிரைகளைப் பெற்றமை. மெகஸ்தனிஸ் என்ற தூதுவனை சந்தித்தமை அரசனின் மகளை சந்திரகுப்த மௌரியனுக்குத் திருமணம்செய்து கொடுத்தமை பற்றி மெகஸ்தனிஸின் இண்டிகா என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பேரரசின் எல்லைகள் டெக்கான் முதல் தென் பகுதிகள் வரை பரவியிருந்தது.

- சந்திர குப்த அரசனின் இறுதிக் காலப் பகுதியில் மைசூருடன் தொடர்பை ஏற்படுத்தியிருந்தான்

- வெளி நாடுகளுடன் தூதுவர் தொடர்புகளை மேற்கொண்டான்.(சிரியா. எகிப்து)

- தரைவழிப் பாதை, கடல் வழிப் பாதைகளினூடாக வர்த்தகம் இடம்பெற்றது.

- சிறந்த நிர்வாக முறை ( நிர்வாகத் திணைக்களங்கள் 28 காணப்பட்டன. ஒவ்வொரு நாளுக்குமான வேலைகள் திட்டமிடப்பட்டது. வெளி நாட்டு யுத்தங்களுக்குப் பயிற்றப்பட்ட பெண்கள் படையணி ஒன்று இருந்தது)

- 5 உறுப்பினர்கள் கொண்ட 6 சபைகள் இருந்தது.

- விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இந்தியாவில் முதன் முதலாக ஒரு பரந்த பேரரசை ஏற்படுத்திய பெருமை இவனையே சாரும்.

(14 புள்ளிகள்)

**6) குஷான அரசர்கள் இந்தியாவின் கலாசார வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினைப் பரீசீலனை செய்க.**

- வெளிநாட்டு இனக் குழுவினரான குஷானர்கள் பெசாவாரைத் தலைமையகமாகக் கொண்டு அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டினர் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதனால் கலாசார எழுச்சிக்கு அது ஏதுவாக அமைந்தது.

- குஷான அரசர்களில் கனிஷ்கன் சிறப்பிடம் பெற்றாலும் வஸிஷ்க. ஹுவிஸ்க. அரசர்கள் கலாசார மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்துள்ளனர்.

- கனிஷ்க அரசன் மகாயான பௌத்தத்தின் எழுச்சிக்கு அடிகோலிய நான்காவது பௌத்த மாநாட்டை காஷ்மீரின் குண்டலவன விகாரையில் வசுமித்ர தேரரின் தலைமையில் நடத்தினான். அஷ்வகோஷ, பர்ஷவ, வசுபந்து, சூரிய பந்து, ஜீனபந்து போன்ற 500 தலைமைப் பிக்குகளின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

- நான்காவது பௌத்த மாநாட்டின் பின்னர் மஹாவிபாஸா என்ற பெயரில் சமஸ்கிருத மொழியில் திரிபிடகம் எழுதப்பட்டது.

- மத்திய மற்றும் கிழக்காசியப் பகுதிகளுக்கு மஹாயான பௌத்தம் பரவியது. (சீனா .ஜப்பான். கொரியா)

- மத்திய ஆசியாவின் யார்காண்ட், கோடாண், நீய போன்ற பகுதிகளில் பௌத்த நிலையங்கள் அமைக்கப்பட்டன. இதனால் இந்தியாவுக்கு வெளியிலும் இந்திய கலாசாரம் பரவியது.

- இந்திய மொழி. இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன.

- அஷ்வகோஷ. வசுமித்ர, பர்ஷவ, நாகர்ஜுன, சுங்கரக்கித போன்ற கற்ற பிக்குகளினால் புத்த சரிதம், சூத்திரலங்கார, சாரிபுத்ர போன்ற இலக்கியங்களுடன் கல்வித்துறை சார்ந்த நூல்கள் தோற்றம் பெற்றன.

- காந்தாரா, மதுரா கலை மரபுகள் தோற்றம் பெற்றன.

- நாணயம் அச்சிடப்பட்டமை (கி.பி.78ஆம் ஆண்டை வைத்து சக அரசாண்டு கணிக்கப்பட்டமை)

- பௌத்த ஆலயங்கள் நிறுவப்பட்டன. (விகாரைகள், தூபிகள்)

- வஸிஷ்க ஹுவிஸ்க அரசர்கள் பௌத்த சமய எழுச்சிக்கு பங்காற்றியதாக ஹியுங் சாங் குறிப்பிட்டுள்ளார். ஹுவிஷ்கபுர ஆராமைகளில் 5000 இற்கும் மேற்பட்ட பிக்குகள் தங்கி இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

- குஷானர்கள் ஏனைய சமய வழிபாடுகளிற்கும் ஆதரவளித்துள்ளனர்.

(14புள்ளிகள்)

**7) "சமுத்திரகுப்த மன்னனின் இராணுவ நடவடிக்கைகளே குப்தப்பேரரசின் உருவாக்கத்திற்கு வழிவகுத்த மிகப் பிரதான காரணியாகும்."**

**(i) சமுத்திரகுப்த மன்னனின் இராணுவ நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பெயரைக் குறிப்பிடுக?**

அலஹபாத் தூண் கல்வெட்டு

(1 புள்ளி)

**(ii) சமுத்திர குப்த மன்னனின் பிரதான இராணுவ படையெடுப்புக்கள் இரண்டு பற்றி பகுப்பாய்க?**

- ஆரிய வர்தன வெற்றி (வட பகுதி) 9 அரசுகளைக் கைப்பற்றி குப்தப்பேரரசுடன் இணைத்தமை. ருத்திரதேவ, மிதில, நாகத்த, சந்திரவர்மன், கணபதிநாக, நாகசேன, நந்தி, அச்சுத, பாலவர்மன் முதலிய அரசர்களைத் தோற்கடித்து அவர்களின் அரசுகளைத் தமது நாட்டுடன் இணைத்தமை.

- மத்திய பகுதி அரசுகளை வெற்றி கொள்ளல்-மத்திய இந்தியாவின் விந்திய மலைக்கருகில் இருந்த அரசர்களைத் தோற்கடித்து தமது நாட்டுடன் இணைத்துக் கொள்ளாது தனது ஆணையை ஏற்கச் செய்தமை.

- தென்பகுதி வெற்றி - தென்பகுதியில் இருந்த அரசர்களைத் தோற்கடித்து தனது மேலாதிக்கத்தை ஏற்கச்செய்தமை

| | | |
|---|---|---|
| கோசல | - | மகேந்திர |
| காஞ்சி | - | விஷ்ணுகோப |
| மஹாகாந்தாரா | - | வியாக்ரராஜா |
| அவமுக்தய | - | நீல ராஜ |
| கோரளை | - | மந்தராஜா |
| வேங்கை | - | ஹஸ்திவர்மன் |
| பிஸ்டபுர | - | மகேந்திர |
| பல்லக்கு | - | உக்ரசேன |
| கொட்டுர | - | சுவாமிதத்த |
| தேவராஷ்ட | - | குபேர |
| ஏரந்த பல்ல | - | தமண |
| குஷ்தல | - | தனஞ்சய |

(இவை அனைத்தும் கிழக்குப் பகுதி அரசுகளாக கருதப்படுகிறது)

- எல்லைப்புற அரசுகளை வெற்றி கொள்ளல். எல்லைப்பகுதியில் இருந்த கோத்திர அரசர்களை வெற்றிகொண்டு அவர்களிடமிருந்து வரிகள், அன்பளிப்புக்கள் முதலியவற்றைப் பெற்றுத் தனது மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தமை. (காமருப, நேபாளம், தவாக)

(04 புள்ளிகள்)

(iii) குப்தப்பேரரசின் உருவாக்கத்திற்குச் சமுத்திர குப்த மன்னனின் இராணுவ நடவடிக்கைகள்அடிப்படையாய் அமைந்த விதத்தை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க?

- சிறீகுப்த அரசனால் தோற்றுவிக்கப்பட்ட குப்தப்பேரரசு முதலாம் சந்திரகுப்த அரசனின் லிச்சவி அரசுடனான திருமணத்தின் மூலம் சற்று விரிவடைந்தது. எனினும் பாடலிபுத்திரத்திற்குத் தொலைவில் உள்ள பகுதிகளுக்கும் குப்த அதிகாரம் பரவலாக்கப்பட்டமை சமுத்திர குப்த அரசனாலாகும். இவ்வாறு ஆரியவர்தன அரசுகளை வென்று தனது அரசுடன் இணைத்ததுடன் வெற்றி கொண்ட ஏனைய அரசுகள் சிலவற்றைத் தனது மேலாண்மையை ஏற்று நடக்கச் செய்தான்.

- எல்லைப்புற நாடுகளுடன் சினேக உறவுகளைப் பேணியுள்ளான். அலஹபாத் குறிப்பின்படி தைவபுத்திர. சகமுருந்த. இலங்கை என்பன அவ் எல்லைப்புற அரசுகளாகும்.

- இவ்வாறு சமுத்திரகுப்தனால் உருவாக்கப்பட்ட பேரரசுக்கு பின்னர் வந்த சந்திரகுப்தன் மால்வா, குஜராத், சௌராஷ்ரா முதலிய பகுதிகளை இணைத்துக் கொண்டான். இவ்வாறு குப்தப்பேரரசின் எழுச்சிக்கு சமுத்திர குப்தன் முன்னோடியாகத் திகழ்ந்தான் (09புள்ளிகள்)

8) கன்னோஜியின் மேலாதிக்கத்திற்காக மன்னன் ஹர்ஷவர்தனனின் ஆட்சியின் பின்னர் ஏற்பட்ட போராட்டத்தை விவரிக்குக?

- ஹர்ஷவர்தன மன்னனின் பின்னர் கன்னோஜியின் மேலாதிக்கத்தைப் பெற மூன்று அரச வம்சத்தினர் அதிகாரப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

- மேற்கு இந்தியாவின் ராஜபுதினத்தின்-குர்ஜர பிரதிஹார, வங்காளத்தின்- பால, மேற்கு தக்கணத்தின்-ராஷ்ரகூட ஆகிய மூன்று வம்சத்தினர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

- ஹர்ஷவர்தனவின் காலத்தில் வடஇந்தியாவின் அதிகார மத்திய நிலையமாக கன்னோஜ் காணப்பட்டதால் அதனைத் தனதாக்கும் முயற்சியில் இம்மூன்று வம்சத்தவர்களும் போராடினர்.

- பிரதிஹார அரசன்-வத்ச ராஜனுக்கும் ராஷ்ரகூட அரசன் -ட்ரேவ அரசனுக்கும் வங்காள அரசன் தர்ம பாலவிற்கும் இடையில் இப்போராட்டம் இடம் பெற்றது.

- வங்காள அரசன் தர்மபால கன்னோஜ்ஜைக் கைப்பற்றி தனக்குக் கட்டுப்பட்ட சக்ராயுத என்பவனை அதன் நிர்வாகியாக நியமித்தான். இதனால் வடஇந்திய அரசர்கள் தர்மபாலனின் ஆதிக்கத்தை ஏற்றிருந்தனர்.

- வத்சராஜ அரசனின் மகன் இரண்டாம் நாகபட்ட அரசனால் தர்மபாலன் தோற்கடிக்கப்பட்டாலும் ராஷ்டிரகூட அரசன் மூன்றாம் கோவிந்தனால் வட இந்தியப் பகுதிகள் கைப்பற்றப்பட்டு நாகபட்ட அரசன் தோற்கடிக்கப்பட்டான். எனினும் கோவிந்த அரசன் அப்பகுதியை விட்டுத் திரும்பியதும் தர்மபாலன் அவற்றை மீண்டும் கைப்பற்றினான்.

- தர்மபாலனின் மகன் தேவபாலன் வட இந்தியப் பகுதிகளில் அதிகாரத்தை நிலைநாட்டப் பாடுபட்டான்.

- இறுதியில் இவ்வரசுகள் மூன்றினதும் பலம் குன்றி அப்பகுதிகளில் புதிய அரச வம்சத்தினர் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். (14புள்ளிகள்)

**9) (A)பகுதிக்கு அல்லது (B) பகுதிக்கு மாத்திரம் விடையளிக்குக?**

**(A)தென் இந்திய கலாசாரத்தின் வளர்ச்சிக்குப் பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பினை பரிசீலனை செய்க.**

- பல்லவ அரசர்கள் தென் இந்திய கலாசார மேம்பாட்டிற்குப் பல்வேறு பணிகளைச் செய்துள்ளனர். அவர்களின் பலமான பொருளாதார அரசியல்நிலை இதற்கு உறுதுணையாக அமைந்தது.

- அவர்களின் கலாசார எழுச்சியினை - கட்டடக் கலை, சிற்பம், சித்திரம், செதுக்கல், சமயம், இலக்கியம் என்ற துறைகளில் காணலாம்.

**கட்டடக்கலை**

- தென்இந்தியக் கட்டடக் கலை வளர்ச்சியின் உன்னத காலகட்டம்.

- இக்காலப்பகுதியில் கட்டப்பட்ட கோயில்கள் பிரதானமாக இரண்டு வகையில் அமைந்திருந்தன.

- கற்பாறைகளைக் குடைந்து கட்டப்பட்ட கோயில்கள்.
  - தூண்கள் கொண்ட குகைக்கோயில்கள் (மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி, பல்லாவரம்)
  - மண்டபமும் தேரும் (மஹாபலிபுரம்) மகாபாரதத்தில் வரும் வீரர்களின் பெயர்களில் தேர்கள் அமைக்கப்பட்டன (பீமன், அர்ஜுன, சஹதேவ, தர்மராஜ)

- கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கோவில்கள்.
  (மாமல்லபுரம், காஞ்சிபுரம் கைலாசநாதர், வைகுண்டப் பெருமாள் கோவில்கள்)

**சிற்பமும் செதுக்கலும்**

- கோவிலின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் இந்துக்கடவுள்களின் உருவங்கள் சிலைகளாகச் செய்து வைக்கப்பட்டுள்ளன (விஷ்ணு, கிருஷ்ணா, துர்க்கா, லக்ஷ்மி)

- இந்துசமயக் கதைகளைத் தழுவிச் செய்யப்பட்ட சிற்பங்களும் செதுக்கல்களும்.

- பல்லவ அரசர்களின் உருவங்கள் (மாமல்லபுரம், கைலாசநாதர் கோவில்)

**சமயம்**

- வைஷ்ணவ - ஆழ்வார்களும், சைவ - நாயன்மார்களும் சமயப் பணிகளில் ஈடுபட்டனர்.

- பௌத்த, ஜைன சமய நிலையங்களும் செல்வாக்குடன் இயங்கி வந்தன.

**கல்வியும் இலக்கியமும்**

- கல்வி மற்றும் இலக்கியப் பணிகளுக்கு அரச ஆதரவு கிடைத்தமை
- கல்வியில் சிறந்த இடமாகக் காஞ்சிபுரம் திகழ்ந்தது.(சமஸ்கிருத கல்வி முறை)
- பல்லவ எழுத்துக்களின் வளர்ச்சி
- அரசர்களும் இலக்கியப் பணியில் ஈடுபட்டமை.(முதலாம் மகேந்திர வர்மன்)
- கல்வியிற் சிறந்த பண்டிதர்கள் இலக்கியப் பணியில் ஈடுபட்டமை
  (தண்டி என்ற சமஸ்கிருத கவிஞர், காவிய தரிசனம், குமார காவியம்)
- கர்நாடக இசை வளர்ச்சியடைந்தமை.
- முதலாம் மகேந்திரவர்ம அரசன் சிறந்த இசை ஞானியாகத் திகழ்ந்தான்.
- நாடகத்துறை வளர்ச்சி பெற்றது. (14 புள்ளிகள்)

(b)**சோழர்களின் நிர்வாக முறைமையின் பிரதான பண்புகளைப் பரிசீலனை செய்க?**

- தஞ்சாவுரைத் தலைநகராகக் கொண்டு 400 ஆண்டுகளாக ஆட்சிசெய்த சோழப்பேரரசு பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டிருந்தது.
- நிர்வாகம் பிரதானமாக மூன்று அலகுகளாக பிரிக்கப்பட்டிருந்தது.
  - மத்திய நிர்வாகம்
  - பிராந்திய நிர்வாகம்
  - கிராம நிர்வாகம்

**மத்திய நிர்வாகம்**

- அதிகாரம் குவிக்கப்பட்ட அரசாட்சிமுறை - அரசன் சட்டம், நீதி, நிர்வாகம் ஆகிய சகல அதிகாரங்களையும் கொண்டிருந்தான்.
- அரசனுக்கு உதவியாக அமைச்சர்களும், உதன்குட்டம் எனப்பட்ட அதிகாரிகளும் இருந்தனர் (மேலதிகாரிகள் பெரும் தனம் எனவும் கீழ்அதிகாரிகள் சிறு தனம் எனவும் அழைக்கப்பட்டனர்)
- மத்திய நிர்வாகத்தில் ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் ஒவ்வொரு அமைச்சர் நியமிக்கப் பட்டிருந்தனர்
- நிர்வாகத்தின்போது கட்டளைகள் வாய்மொழியாக விடுக்கப்பட்டு பின்னர் அது தொகுக்கப்பட்டது
- மத்திய நிர்வாகத்தில் அரசனே பிரதானமானவனாக இருந்தான். இளவரசர்களும் ராஜகுருவும் அரசனுக்கு உதவிபுரிந்தனர். (ராஜகுரு- ஆலோசனை வழங்குதல்)

**பிரதேச நிர்வாகம்**

- சோழப்பேரரசின் உச்சகட்டத்தில் மண்டலம் என அழைக்கப்பட்ட 06 பகுதிகளாக பேரரசு பிரிக்கப்படடிருந்தது (சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், மும்முடிச்சோழ மண்டலம்)
- பிரதான நிர்வாக அலகுகள் (மண்டலங்கள்) மேலும்
- கோட்டம், வள நாடு
- நாடு, கூற்றம், மெலாகம் என்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது
- கன்குரம் நகரநிர்வாக மத்திய நிலையமாக இருந்தது.

**கிராம நிர்வாகம்**

- கிராம சபை முறை
- கிராம நிர்வாகத்தில் ஊர், நாடு என்ற இரு அலகுகள் இருந்தன.
- ஊர் என்பது கிராமமாகும். பல ஊர்கள் சேர்ந்து கிராம சபைகள் ஏற்படுத்தப்ட்டன.
- கிராமம் 30 பகுதியாகப் பிரிக்கப்பட்டு சீட்டிழுப்பு மூலம் பிரதி நிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்
- உத்தரமேரு குறிப்பில் கிராம நிர்வாகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கிராம நிர்வாகத்திற்காக கிராம மண்டலம், வாரியம், முக்த என்ற சபைகள் இருந்துள்ளன.
- மத்திய நிர்வாகம் பலவீனப்பட்டாலும் கிராம சபை நிர்வாகம் சிறந்து விளங்கிது.
- சோழர் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் பங்களிப்பு முக்கியமானதாகும்
- தஞ்சாவூரை மையமாகக் கொண்ட சோழப்பேரரசு கடல் கடந்த பகுதிகளையும் தனது ஆட்சிக்குட்படுத்தியது.
  (இலங்கையின் வடபகுதி, ஜாவா, சுமாத்திரா, மாலைதீவு, நிக்கோபார், தென் கிழக்கு ஆசியா)